2020 பிப்ரவரி 17]

*சொல்கிறாரென்று சொல்கிறார். அவர் தெளிவாகச் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் ஒரு விவசாயி ** என்று சொல்லி, இலவச மின்சாரம் நிறுத்தப்பட்டிருக்கின்றதா,* Tatkal *மட்டும்தான் கொடுக்கப்படுகின்றதா, பணத்திற்கு அதனை மாற்றிக் கொடுக்கின்றீர்களா, இலவச மின்சாரத்திற்குப் பதிலாக இதுபோன்று* Tatkal *முறையில் கொடுக்கப்படுகின்றதா, கொடுப்பீர்களா, நிறுத்தி விடுவீர்களா என்றெல்லாம் கேட்டார். நீங்கள் பேசிக்கொண்டு கவனிக்காமல் விட்டுவிட்டீர்களென்று நினைக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். நான் தடை மீறி, வரம்பு மீறி செல்கின்றவன் அல்ல என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். கேட்ட கேள்விக்கு மட்டும்தான் நான் பதில் சொன்னேன். ஆக, நான் இப்போதும் தெளிவாகச் சொல்கின்றேன். இந்த மூன்றாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 72,525 மின் இணைப்புகள் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுடைய அரசு என்பதால் எந்தச் சூழ்நிலையிலும் விவசாயத்திற்குக் கொடுக்க வேண்டிய மின் இணைப்புகளை நாங்கள் கொடுத்துக்கொண்டே இருப்போம். அதேபோல, இலவச மின்சாரமும் தொடர்ந்து வழங்கப்படும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

பாதாள சாக்கடைத் திட்டம்

***27398—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2020 பிப்ரவரி 17

(அ) தென்காசி தொகுதி, தென்காசி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவசாயியாகப் பிறந்து, ஒரு விவசாயியாக, அற்புதமாக ஆட்சியை நடத்தி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களையும், மக்களுக்குத் தேவையான அத்தனை திட்டங்களையும் தந்து, அனைத்துத் தரப்பு மக்களாலும் நல்லரசு என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதும் சந்திக்கக்கூடிய முதலமைச்சர், எளிமையான முதலமைச்சர் என்றும் பாராட்டப்படக்கூடிய, அம்மாவினுடைய அரசின் சிறப்பான நிருவாகத்தால் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற விருதைப் பெற்றுத் தந்ததற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்ததற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) 11 மருத்துவக் கல்லூரிகளை மத்திய அரசிடமிருந்து பெற்றுத் தந்து சரித்திர சாதனை புரிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்த அத்தனை திட்டங்களுக்கும் உறுதுணையாக இருந்த எங்கள் ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தென்காசி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக, கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மை எல்லாம் வாழவைத்துவிட்டுச் சென்றிருக்கின்ற பெரும் தலைவர்கள், புரட்சித் தலைவர்

2020 பிப்ரவரி 17]

எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகிய இரு தலைவர்களையும் வணங்குகிறேன். இன்றைக்கு உலக நாடுகளெல்லாம் தமிழகத்தைத் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு தமிழகத்தை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10–35

எங்களுடைய பல நாள் கோரிக்கையான தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு, தென்காசி தனி மாவட்டத்தை உருவாக்கித் தந்ததோடு மட்டுமல்லாமல், நேரடியாக அங்கே வந்து தென்காசி மாவட்டத்தை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, அவருக்கு உற்ற துணையாக இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் தென்காசி நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு மாற்றுத் திட்டமாகிய கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது என்று பதிலளித்துள்ளார்கள். அதை நானும் அறிவேன். ஆனால், தென்காசி நகராட்சியானது இன்றைக்கு ஒரு சிறப்பு வாய்ந்த நகராட்சியாக அமைந்துள்ளது. இன்றைக்கு, அது தென்காசி மாவட்டத்திற்குத் தலைமையிடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நகராட்சியானது கிரேடு 1 நிலையில் உள்ளது. அங்கே 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புப்படி கிட்டத்தட்ட 70,545 பேர் இருந்தார்கள். இப்போது 10 ஆண்டுகள் ஆகின்றன. இன்றைக்கு, அது இருமடங்காகி ஒன்றரை இலட்சத்திற்குமேல் மக்கள் இருக்கக்கூடிய நிலை இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அது 26.15 Square Kilometer பரப்பளவிற்கு பரந்து, விரிந்திருக்கின்ற பெரிய நகராட்சியாகும். ஆகையால், இந்த கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டம் மட்டும் போதாது. எனவே, இதனைக் கனிவோடு பரிசீலித்து பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தென்காசி நகராட்சியின் மக்கள்தொகை 70,545 ஆகும். தென்காசி நகராட்சியில் தற்போதுள்ள மக்கள்தொகை மற்றும் வெளியேறும் கழிவுநீரின் அடிப்படையில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. தென்காசி நகராட்சியின் மக்கள்தொகை ஒரு இலட்சத்திற்கும் குறைவாக உள்ள காரணத்தினால், பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்காலத்திலே அதிக மக்கள்தொகை வரும் என்றும், தென்காசி மாவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தும் நேர்வில், சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவைப்படும் இடங்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை. இப்போது, மாநகராட்சிகளிலே இடம் கிடைப்பதில் அதிக சிரமம் இருக்கிறது; அதேபோல நகராட்சிகள், பேரூராட்சிகளிலெல்லாம் இடம் கிடைப்பதில்லை. இடம் சம்பந்தமாக ஏதாவது வழக்குக்குப் போய் விடுகின்றனர்; அதற்கான இடத்தை எங்கேயும் தருவதில்லை; அதனால்தான், இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தென்காசி நகராட்சியில் வீடுகளில் உள்ள கழிவுநீர் சேகரிப்புத் தொட்டிகளில் தினசரி 40 KLD, அதாவது நாளொன்றுக்கு 40 ஆயிரம் லிட்டர் கழிவுநீர் சேகரமாகிறது. அவ்வாறு சேகரமாகும் கழிவுநீரை லாரிகளில் எடுத்துச் சென்று சுத்திகரிக்க மத்தளம்பாறை உரக் கிடங்கு பகுதியில் ரூபாய் 4 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 20 சதவிகிதப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன. இப்பணிகள் ஜூன் மாதத்திற்குள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தத் திட்டத்தின்மூலம் வெளியேறும் கசடு கழிவுநீர் விவசாயப் பயன்பாட்டிற்கு வழங்கப்படும். மேலும், இந்தத் திட்டத்தை நாம் implement செய்துவிட்டோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டபோது, இந்தத் திட்டம் implement செய்யப்பட்டு, தற்போது பணி நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டம் சரியான முறையில் செயல்படுத்தப்படும். அப்படி ஒருவேளை, ஒரு சூழ்நிலையில், சுத்திகரிப்பு நிலையம் எல்லாம் அமைப்பதற்கு அங்கே இடம் கிடைக்கின்றபட்சத்திலும், அங்கு

2020 பிப்ரவரி 17]

மக்கள்தொகை பெருகுகின்றபட்சத்திலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவோடு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்காசி நகராட்சியானது 1964 ஆம் ஆண்டுக்கு முன்பாக பேரூராட்சியாக செயல்பட்டு வந்தது. அந்தப் பேரூராட்சிக்கு குற்றாலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக தண்ணீரை வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நமக்கு விரிவான நல்லதொரு குடிநீர்த் திட்டம் வழங்கும் விதமாக, அதாவது 'நகராட்சியைத் தேடி மக்கள்' என்ற நிலையை மாற்றி, 'மக்களைத் தேடி நகராட்சி' என்ற நிலையில், எங்களுடைய தென்காசி நகராட்சிக்கு 44.43 கோடி ரூபாயில் புதிதாக குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தை செயலாக்கக்கூடிய நிலையில் உள்ளார்கள். அதை விரைந்து தாங்கள் முடிப்பதுமட்டுமல்லாமல், அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் சூழ்நிலையில், அங்கே அதிகமான சாலைகள் பழுதடைந்துள்ளன. ஏனென்றால், இந்தத் திட்டத்தை காரணமாகக் காண்பித்து அந்தப் பழுதுகளை நீக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லை. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு IUDM அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக அதிகமான நிதியை சாலைப் பணிகளுக்கு ஒதுக்குவதோடு, குடிநீர்த் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்கும் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக்

குடிநீர்த் திட்டத்தை விரைவாக முடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். வீட்டு இணைப்பு வழங்கக்கூடிய குடிநீர்த் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். கண்டிப்பாக, விரைவாகச் செயல்படுத்தப்படும். அதுமட்டுமல்லாமல், பழுதடைந்த சாலைகளை உடனடியாக சீர் செய்து தர வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது பல்வேறு திட்டங்கள் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு சாலைப் பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. விடுபட்ட பணிகள் குறித்து நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்திருக்கின்ற திருச்செந்தூர் பேரூராட்சிப் பகுதி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியின் இரண்டாம் படைவீடாக அமைந்திருக்கின்ற பகுதி. அந்தப் பகுதி அதிகமான சாமானிய மக்கள் குடியிருக்கின்ற பகுதியாக இருக்கிறது. அதையெல்லாம் அறிந்து எங்களுடைய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பாதாள சாக்கடைத் திட்டத்தைத் தந்து, அந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், பாதாள சாக்கடைத் திட்டம் அவசரகோலமாக முடித்து வைக்கப்பட்டிருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றதே தவிர திருச்செந்தூர் பகுதியில் உள்ள ரோடுகளில் எல்லாம் கழிவுநீர் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சாமானிய மக்கள் வருகின்ற அந்தப் பகுதியில் கழிவுநீர் செல்கின்ற காரணத்தினால் கடுமையான நோய் பாதிப்புகள் மற்றும் துர்நாற்றம் நிறைந்த பகுதியாக மாறியிருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்தபொழுது, அந்தக் கழிவுநீரை சுத்தமான நீராக மாற்றி, 50 ஏக்கர் நிலங்களை ஒதுக்கி அதிலே கீரைத் தோட்டங்களை அமைக்க வேண்டுமென்ற வகையிலே திட்டங்களை வகுத்தார்கள். ஆனால், அந்தக் கழிவுநீர் எல்லா இடங்களிலும் சுற்றிவிட்டு மீண்டும் திருச்செந்தூருக்கே வருகிற*

2020 பிப்ரவரி 17]

சூழ்நிலை ஏற்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெகு சீக்கிரத்தில் திருச்செந்தூர் வரப்போவதாகச் சொல்கின்றார்கள். திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியை வணங்கி, அதிகாரிகளிடம் ஆய்வு நடத்தி, பாதாள சாக்கடைத் திட்டத்தைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டுவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக வேண்டி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு திருச்செந்தூர் முருகன் கோயில் பிரசித்தி பெற்ற கோயில். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அமைச்சராக இருந்தவர். பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவந்து செயல்படுத்தப்பட்டபோதிலும், முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை, வீதிகளிலே கழிவுநீர் ஓடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தமாதிரி ஒரு தகவல் எங்களுக்கு வரவில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அங்கேயே இருப்பவர். அப்படி இருக்கின்றபட்சத்தில், உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை, குறிப்பாக, அதிகம் பழுதடைந்த சாலைகளை சீர் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்கள். சாலைகள் பழுதடைந்திருந்தால் அவை சரி செய்யப்படும். அதேபோல வீதிகளில் ஓடக்கூடிய பாதாள சாக்கடை கழிவுநீர் கண்டிப்பாக உடனடியாக சரி செய்யப்படும். திருச்செந்தூர் பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 7–1–2010 அன்று 14.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அனுமதி வழங்கப்பட்டது. 21 வார்டுகளில் 18 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. திட்டப் பணிகள் 2 சிப்பங்களாக நிறைவேற்றப்பட்டன. சிப்பம் 1–ல், 12–11–2010 அன்று 18 மாதங்களில் பணிகள் முடிக்கப்பட வேண்டுமென்று ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. சிப்பம் 2–ல், 3.9 மில்லியன் லிட்டர்*

கழிவுநீர் நீட்டித்த பிராணவாயு ஏற்றமுறையில் EASP முறையில் சுத்திகரிப்பு செய்யும் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான உத்தரவு 17–8–2010–ல் வழங்கப்பட்டிருக்கிறது. அனைத்துப் பணிகளும் முடிவடைந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்போது 2015 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. எனக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல சூழ்நிலை இல்லையென்று அதிகாரிகள் பதில் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்ற சூழ்நிலை இருந்தால், ஆய்வு செய்து கண்டிப்பாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

முற்பகல் 10–45

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி புதிய மாவட்டத்திலே பெரிய ஊர் கடையநல்லூர் நகராட்சி. கடையநல்லூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, அது அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது. கடையநல்லூர் நகராட்சி எல்லையில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படவில்லை என்று பலமுறை இதே சட்டமன்றத்திலே கோரிக்கை வைக்கப்பட்டபின் ஒரு வருடத்திற்கு முன்பு, நமது மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்களுடைய முன்னிலையில், 6,000 பேருக்கு புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, இதுவரை அது முழுமை பெறாமல், குறையாக இருந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பணி எந்த அளவில் இருக்கின்றது என்பதும் எங்களுக்குத் தெரியவில்லை. நகராட்சி ஆணையர் பலபேர் மாற்றப்பட்டிருக்கின்றார்கள். தற்போது அங்கு குடிநீர் இணைப்புகள் வழங்குவதில் முறைகேடுகள் ஏற்பட்டதாகக் கூறி, தலைமைச் செயலகத்திலிருந்து அதிகாரிகளெல்லாம்கூட அங்கு வந்து ஆய்வு செய்திருக்கின்றார்கள். மொத்தத்தில் 6,000 பேருக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும் என்று ஒரு வருடத்திற்கு முன்பாகவே அறிவிக்கப்பட்டும், அந்தப் பணிகளெல்லாம் நடைபெறாமல், அங்கிருக்கக்கூடிய மக்களெல்லாம் அவதிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். கோடை காலம் வர இருக்கின்றது.

2020 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், நீங்கள் துணைக் கேள்வியை சுருக்கமாகக் கேட்டால் பரவாயில்லை. மணியைப் பாருங்கள். இதுவரை 3 கேள்விகள்தான் கேட்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகக் கேள்விகளைக் கேட்டால், மாண்புமிகு அமைச்சர்களும் சுருக்கமாகப் பதில் சொல்வார்கள்; நிறைய பேருக்கு வாய்ப்புத் தரலாம். ஆனால், என்னால் வாய்ப்பு கொடுக்க முடியாத அளவிற்கு நீங்கள் துணைக் கேள்வியைக் கேட்பதிலேயே நேரத்தை எடுத்துக்கொள்கிறீர்கள். நான் என்ன செய்வது? கேள்வியை சுருக்கமாகக் கேட்டு முடியுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வருடத்திற்கு முன்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முன்னிலையிலே அறிவிக்கப்பட்ட 6,000 குடிநீர் இணைப்புகள் எப்பொழுது வழங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, பாதாள சாக்கடைத் திட்டம் தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்டு, கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். தி.மு.க. ஆட்சியில் மொத்தமாக 55 பாதாள சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என அறிவித்தார்கள். ஆனால், 20 திட்டங்கள் மட்டுமே அப்போது செயலாக்கத்தில் எடுக்கப்பட்டன. எஞ்சிய 35 திட்டங்களில், 18 திட்டங்கள் நிருவாக அனுமதி வழங்கப்பட்ட நிலையிலும், 17 திட்டங்கள் அறிவிக்கப்பட்ட நிலையிலும், அப்போது தி.மு.க. ஆட்சியால் கைவிடப்பட்டன. எடுக்கப்பட்ட 20 திட்டங்களில் ஒரு திட்டம் மட்டும், அதாவது பல்லாவரத்தில் மட்டும் இத்திட்டம் தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது. மீதமுள்ள 19 திட்டங்களில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான், 1,624 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பல்வேறு திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன, பல்வேறு திட்டங்கள் செயலாக்கத்தில்*

[2020 பிப்ரவரி 17

உள்ளன. பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றும்போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதுகுறித்து முன்பே கூறியிருக்கிறேன். சுத்திகரிப்பு நிலையத்திற்கு நிலம் எடுப்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. நிறைய இடங்களில் depth அதிகமாக இருக்கும், அதாவது மணல் இருக்கக்கூடிய பகுதிகளில் depth அதிகமாக இருக்கும். இதுபோன்ற பல்வேறு சூழ்நிலைகள் இருக்கின்றன. நெருக்கமாக இருக்கக்கூடிய city–ல்தான் பைப் லைன் பதிப்பது போன்ற பணிகளைச் செயல்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது; இதுபோன்ற பிரச்சினைகளெல்லாம் இருக்கின்றன.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 6,000 குடிநீர் இணைப்புகள் வழங்குவது பற்றிக் கூறினார்கள். அதுகுறித்து, உடனடியாக துறைரீதியாக ஆய்வு செய்து, உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

புதிய மீன் தொட்டி

***54278—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், பாலமேடு அருகில் உள்ள சாத்தியார் அணையில் பழுதடைந்துள்ள மீன் தொட்டிக்கு மாற்றாக புதிய மீன் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?